***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 554/2020 – P.W. 3 (LW4)***

| | |
|---|---|
| *Name* | பாலாஜி |
| *Father/Husband's Name* | மாணிக்கம் பிள்ளை |
| *Village* | மன்னுர்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *48* |

**எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 16.02.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். சமையல் வேலை செய்து வருகிறேன்.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் என்னுடைய கையெழுத்து இல்லை. வழக்கு சம்பவம் எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. **(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, BSA பிரிவு 157 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 06.06.2019 ம் தேதியன்று மாலை 06.00 மணியளவில் நான் மன்னார்குடி பஸ் ஸ்டாண்ட் செல்வதற்காக சிங்கப்பூர் ஆப்டிகல்ஸ் அருகே நின்றுகொண்டிருந்தபோது அதற்கு முந்தையநாள் இரவு 07.30 மணியளவில் அசா.1 க்கும், எதிரிக்கும் நடந்த தகராறு தொடர்பாக மன்னார்குடி நகர போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்து விட்டு, தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக

அரசுத்தரப்பிற்கு எதிராகவும், எதிரிக்கு சாதகமாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.